DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**OS. No. 2 /2019**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | DW1 |
| Name | : | பால்குமார் |
| Father's / Husband's Name | : | சுப்பாரெட்டி |
| Age | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Caste | : | |
| Village | : | |
| Date | : | 10.03.2021. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி. வழக்கு விசாரணையில் எனது சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை தான். அதைப் படித்துப்பார்த்துதான் கையெழுத்துப்போட்டேன். 15.04.2013 தேதியில் முருகன் மேஸ்திரியிடம் செய்துகொண்ட ஒப்பந்தம் **பி.சா.ஆ.4.** (வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது ஆட்சேபணையில் ஒப்பந்தத்தின் முதல் பக்கம் ஜெராக்ஸ் ஆவணமாக உள்ளது என்றும் அதனை குறியீடு செய்ய முடியாது என்றும் ஆட்சேபணை தெரிவித்தார். இந்த கட்டிட வேலை ஒப்பந்தம் முருகன் என்ற மேஸ்திரியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதால் அதன் உண்மை தன்மை குறித்து பிரதிவாதி தரப்பில் அந்த ஆவணத்தை நிரூபிக்கும் தன்மைக்கு உட்பட்டு அதனுடைய சாட்சிய மதிப்பு அடிப்படையில் நிரூபிக்கும் பட்சத்தில் தான் அந்த ஒப்பந்தம் செல்லுபடி ஆகும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து வாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்தில் உள்ள

ஹோட்டல் கட்டிடத்திற்காக செலவு செய்த மேஸ்திரி லேபர் கான்ட்ராக்ட் கட்டண ரசீது, மணல் வண்டி கட்டண ரசீதுகள் **(31 எண்ணிக்கை) பி.சா.ஆ.5** (ஆட்சேபணையுடன்). மெட்டிரீயல் கான்ட்ராக்ட் ஒப்பந்தம் **பி.சா.ஆ.6** (வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது ஆட்சேபணையில் மெட்டிரீயல் கான்ட்ராக்ட ஒப்பந்தம் முழுவதும் ஜெராக்ஸ் ஆவணமாக உள்ளது என்றும் அதனை குறியீடு செய்ய முடியாது என்றும் ஆட்சேபணை தெரிவித்தார். இந்த கட்டிட வேலை ஒப்பந்தம் முருகன் என்ற மேஸ்திரியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதால் அதன் உண்மை தன்மை குறித்து பிரதிவாதி தரப்பில் அந்த ஆவணத்தை நிரூபிக்கும் தன்மைக்கு உட்பட்டு அதனுடைய சாட்சிய மதிப்பு அடிப்படையில் நிரூபிக்கும் பட்சத்தில் தான் அந்த ஒப்பந்தம் செல்லுபடி ஆகும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து வாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) 15.10.2019 தேதியிட்ட குமார் சிவில் இன்ஜினியர் வழங்கிய கட்டிட மதிப்பு சான்று **பி.சா.ஆ.7** (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). பிராதை தள்ளுபடி செய்யவேண்டும்.

**குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**